ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ மன்னிலங்கு ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ மன்னிலங்கு ॥

## தலைவியிரங்கல் - 2

‡மன்னிலங்கு பாரதத்துத்⋆ தேர் ஊர்ந்து⋆ மாவலியைப்
பொன்னிலங்கு திண் விலங்கில் வைத்துப்⋆ பொரு கடல் சூழ்⋆
தென்னிலங்கை ஈடழித்த⋆ தேவர்க்கிது காணீர்⋆
என்னிலங்கு சங்கோடு⋆ எழில் தோற்றிருந்தேனே (1)

இருந்தான் என்னுள்ளத்து⋆ இறைவன்⋆ கறை சேர்
பருந் தாள் களிற்றுக்கு⋆ அருள் செய்த⋆ செங்கண்
பெருந் தோள் நெடுமாலைப்⋆ பேர் பாடி ஆட⋆
வருந்தாதென் கொங்கை⋆ ஒளி மன்னும் அன்னே (2)

அன்னே! இவரை⋆ அறிவன்⋆ மறை நான்கும்
முன்னே உரைத்த⋆ முனிவர் இவர் வந்து⋆
பொன்னேய் வளை கவர்ந்து போகார்⋆ மனம் புகுந்து⋆
என்னே இவர் எண்ணும்⋆ எண்ணம் அறியோமே (3)

அறியோமே என்று⋆ உரைக்கலாமே எமக்கு⋆
வெறியார் பொழில் சூழ்⋆ வியன் குடந்தை மேவி⋆
சிறியான் ஓர் பிள்ளையாய்⋆ மெள்ள நடந்திட்டு⋆
உறியார் நறு வெண்ணெய்⋆ உண்டுகந்தார் தம்மையே (4)

தம்மையே நாளும்⋆ வணங்கித் தொழுவார்க்குத்⋆
தம்மையே ஒக்க⋆ அருள் செய்வர் ஆதலால்⋆
தம்மையே நாளும்⋆ வணங்கித் தொழுதிறைஞ்சி⋆
தம்மையே பற்றா⋆ மனத்தென்றும் வைத்தோமே (5)

வைத்தார் அடியார்⋆ மனத்தினில் வைத்து⋆ இன்பம்
உற்றார் ஒளி விசும்பில்⋆ ஓர் அடி வைத்து⋆ ஓர் அடிக்கும்
எய்த்தாது மண்ணென்று⋆ இமையோர் தொழுதிறைஞ்சி⋆
கைத்தாமரை குவிக்கும்⋆ கண்ணன் என் கண்ணனையே (6)

www.prapatti.com

கண்ணன் மனத்துள்ளே⋆ நிற்கவும்⋆ கைவளைகள்
என்னோ கழன்ற⋆ இவையென்ன மாயங்கள்⋆
பெண்ணானோம்⋆ பெண்மையோம் நிற்க⋆ அவன் மேய
அண்ணல் மலையும்⋆ அரங்கமும் பாடோமே (7)

பாடோமே⋆ எந்தை பெருமானை⋆ பாடி நின்று
ஆடோமே⋆ ஆயிரம் பேரானை⋆ பேர்நினைந்து
சூடோமே⋆ சூடும் துழாய் அலங்கல் சூடி⋆ நாம்
கூடோமே⋆ கூடக் குறிப்பாகில் நன் நெஞ்சே! (8)

நன் நெஞ்சே! நம் பெருமான்⋆ நாளும் இனிதமரும்⋆
அன்னம் சேர் கானல்⋆ அணியாலி கை தொழுது⋆
முன்னம் சேர் வல்வினைகள் போக⋆ முகில் வண்ணன்⋆
பொன்னம் சேர் சேவடி மேல்⋆ போதணியப் பெற்றோமே (9)

‡பெற்றாரார்⋆ ஆயிரம் பேரானைப்⋆ பேர் பாடப்
பெற்றான்⋆ கலியன் ஒலிசெய் தமிழ் மாலை⋆
கற்றாரோ! முற்றுலகாள்வர்⋆ இவை கேட்கல்
உற்றார்க்கு⋆ உறு துயர் இல்லை உலகத்தே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com